# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.3

## நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016 – 2017

**சி.வி.சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்
துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2016

<u>பொருளடக்கம்</u>


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 2 |
| 3. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 2–5 |
| 4. | மாவட்டவாரியாக நீதிமன்றங்கள் | 6 |
| 5. | செலவினங்களின் வகைப்பாடு | 6 |
| 6. | உயர்நீதிமன்றம், சென்னை | 6–8 |
| 7. | மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை | 8–9 |
| 8. | உரிமையியல் நீதிமன்றங்கள் | 9–13 |
| 9. | குற்றவியல் நீதிமன்றங்கள் | 14–15 |
| 10. | சிறப்பு நீதிமன்றங்கள் | 15–29 |
| 11. | நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் | 29 |
| 12. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 29 |
| 13. | மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 30–32 |
| 14. | பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 32–39 |
| 15. | பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை | 40–41 |
| 16. | நீதிமன்ற மேலாளர்கள் | 41–43 |
| 17. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல் | 43–48 |

| | | |
|---|---|---|
| 18. | உரிமையியல் நீதிபதிகள் நியமனம் | 48 |
| 19. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 49–50 |
| 20. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல் | 50–51 |
| 21. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 51 |
| 22. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 51–52 |
| 23. | மாண்புமிகு நீதிபதிகளுக்கு வாகன வசதி அளித்தல் | 52 |
| 24. | நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் | 52–58 |
| 25. | புதிய நீதிமன்றங்கள் | 58–61 |
| 26. | 2015–16 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட பிற வசதிகள் | 61–76 |
| 27. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 77–86 |
| 28. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 86–87 |
| 29. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 87–93 |
| 30. | மாநில வழக்காடும் கொள்கை–2012 | 93–94 |
| 31. | விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் | 94 |
| 32. | முடிவுரை | 95 |
| | பிற்சேர்க்கை 1 முதல் 7 வரை | 97–111 |

**உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**நீதி நிருவாகம்**

**மானியக் கோரிக்கை எண். 3**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2016 – 2017**

**முன்னுரை**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி குடிமக்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

தமிழகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும் அவற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பாடு அடைந்துள்ளன. நீதித்துறையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டு தகுந்த சூழ்நிலை அமைவதற்கு அரசு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது. சிறந்த சேவையினை வழக்காடும் மக்களுக்கு வழங்கும்பொருட்டு நீதித்துறை அமைப்பிற்கு தேவையான கட்டடங்கள், வசதிகள், மனித சக்தி மற்றும் இதர பிற அடிப்படை வசதிகள் வழங்க இவ்வரசு உறுதிகொண்டுள்ளது.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக புதுதில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றம் உள்ளது. மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை–1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

இம்மாநிலத்தில் மொத்தம் 1014 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், சென்னை மாநகரில் 114 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 900 நீதிமன்றங்களும் இயங்கிவருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

**நீதிமன்றங்கள்**

| | | |
|---|---|---|
| (i) | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 33 |
| (ii) | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 17 |
| (iii) | மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் | 85 |
| (iv) | சார்பு நீதிமன்றங்கள் | 124 |
| (v) | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | 176 |
| (vi) | சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் | 24 |

| | | |
|---|---|---|
| (vii) | தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 30 |
| (viii) | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 194 |
| (ix) | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | 64 |
| (x) | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 12 |
| (xi) | குடும்ப நல நீதிமன்றங்கள் | 20 |
| (xii) | குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் பட்டியலின வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 6 |
| (xiii) | இன்றியமையாப் பொருட்கள் சட்டம், 1955 தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்–கென தனி நீதிமன்றங்கள் | 6 |
| (xiv) | போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம், 1985 தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 4 |
| (xv) | மத்திய குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 8 |

| | | |
|---|---|---|
| (xvi) | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 2 |
| (xvii) | சாதிக்கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம் | 1 |
| (xviii) | மாவட்ட நீதிபதி பதவி நிலையில் மகளிர் நீதிமன்றங்கள் | 32 |
| (xix) | குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | 8 |
| (xx) | குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் விரைவு நீதிமன்றங்கள் | 39 |
| | மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் விரைவு நீதிமன்றங்கள் | 2 |
| (xxi) | தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன்காக்கும் சட்டம், 1997 தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றங்கள் | 3 |
| (xxii) | நில எடுப்பு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 6 |
| (xxiii) | நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் | 23 |
| (xxiv) | ஊழல் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றங்கள் | 8 |

| | | |
|---|---|---|
| (xxv) | தொழில் வழக்கு தீர்ப்பாயம் | 1 |
| (xxvi) | மோட்டார் வாகன விபத்துகள் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதெற்கென தனி நீதிமன்றங்கள் (ஒரு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் உட்பட) | 28 |
| (xxvii) | வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் / விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | 2 |
| (xxviii) | மாநில போக்குவரத்து முறையீட்டு தீர்ப்பாயம் | 12 |
| (xxix) | மாநகராட்சி நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி) | 1 |
| (xxx) | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு | 13 |
| (xxxi) | நடமாடும் நீதிமன்றங்கள் | 12 |
| (xxxii) | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 16 |

**அலுவலகங்கள்**

| | | |
|---|---|---|
| | நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை | |
| | அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை | 1 |
| | துணை அரசு சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை | 1 |

**4. மாவட்ட வாரியாக நீதிமன்றங்கள்**

சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள்/ தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் முறையே பிற்சேர்க்கை–2 மற்றும் 3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**5. செலவினங்களின் வகைப்பாடு**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினத்தின்" கீழும், நீதி நிருவாகம் குறித்த பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினத்தின்" கீழும் வருகின்றன.

**6. உயர்நீதிமன்றம், சென்னை**

6.1 மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர்நீதிமன்றம் ஆகும். சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆகும். சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை தற்போது 38 நீதிபதிகளை கொண்டு இயங்கி வருகிறது. உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளில் அசல் மனுக்களையும் மற்றும் சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை) விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல்முறையீட்டு விசாரணை அதிகாரமும் இந்நீதிமன்றம் பெற்றுள்ளது. உரிமையியல் தொடர்பான அசல் வழக்குகளை பொறுத்தவரை சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.25 இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணிகள் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரியிலுள்ள நீதிமன்றங்களும் வருகின்றன. புதுச்சேரி தொடர்பான பணிகளை கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

**6.2** உயர்நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவர் தலைமைப் பதிவாளர் ஆவார். அவருக்கு உதவியாக பதிவாளர் (விழிப்பு), பதிவாளர் (நீதித்துறை), பதிவாளர் (நிர்வாகம்), கூடுதல் பதிவாளர் (விழிப்பு), பதிவாளர் (மேலாண்மை), மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களின் பதிவாளர் மற்றும் தனிச்செயலாளர் மற்றும் பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), பதிவாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் புள்ளியியல்), நொடித்தவர் சொத்தாட்சியர், இணைப் பதிவாளர் (மரபு), இணைப் பதிவாளர் (கணினி), இணைப் பதிவாளர் (தகவல் பெறும் உரிமைச் சட்டம்),

இணைப் பதிவாளர் மற்றும் தனி அலுவலர் (தொடர்பு), இணைப் பதிவாளர் (அசல் மனுக்கள்), இணைப் பதிவாளர் (மேல்முறையீடு), இணைப் பதிவாளர் (நீதித்துறை) மற்றும் இணைப்பதிவாளர் (நீதிப்பேராணை) ஆகியோர் உள்ளனர். மேலும் பதிவாளர்களுக்கு உதவியாக மாஸ்டர்கள், துணை பதிவாளர்கள், துணை நொடித்தவர் சொத்தாட்சியர், உதவிப் பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

**6.3** நீதிபரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## 7. மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக்கிளை

7.1 சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையானது, 24.07.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் அதிகார எல்லை மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை 11 நீதிபதிகளை கொண்டு இயங்கி வருகிறது. அசல் வழக்குகளின் அதிகார

வரம்பினை தவிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

7.2 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் நிருவாகத் தலைவராக பதிவாளர் (நிருவாகம்) உள்ளார். இவருக்கு துணையாக பதிவாளர் (நீதித்துறை) உள்ளார். இவர்களுக்கு உதவியாக துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்கள் உள்ளனர்.

## 8. உரிமையியல் நீதிமன்றங்கள்

### 8.1 சென்னை மாநகர்

**(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்களில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் 20 நீதிபதிகள் (ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட), முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 18 நீதிபதிகள் மற்றும் நிருவாக பொறுப்பு வகிக்கும் உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் ஒரு பதிவாளர் உட்பட, மொத்தம் 39 நீதிபதிகள் உள்ளனர். இந்நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது சென்னை மாநகர் எல்லை முழுமையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதி ரூ.10 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி

ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமலும் விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒரு வழக்கின் பண மதிப்பு ரூ.25 இலட்சத்திற்கு மேற்படின் அவ்வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட வேண்டும். சென்னை அமர்வு பிரிவிற்கு, மாநகர உரிமையியல் நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. ஒரு கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம், ஊழல் தடுப்புச் சட்டம், 1988–இன் கீழ் தொடரப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன்காக்கும் சட்டம், 1997 தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

**(ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றங்கள், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதி சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கு தலைமை வகிக்கிறார். இவரை தவிர, முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும், நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கின்ற பதிவாளர் உட்பட உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும் சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளனர். பதிவாளர், சில குறிப்பிட்ட நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற நீதிமன்றப் பணிகளையும் கவனிக்கிறார். இந்நீதிமன்றங்கள்

1882–ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை பெற்றுள்ளன. ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறுவழக்கு நீதிமன்றங்கள், 1988 ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் இரண்டு, மூன்று, நான்கு, ஏழு மற்றும் எட்டாவது நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்கள்.

### 8.2 வெளியூர் நீதிமன்றங்கள்

#### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்/கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் 31 மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் 54 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் ஆக மொத்தம் 85 மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில தொழிலாளர்

காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டு உச்ச வரம்பின்றி விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர். இவர்கள் தத்தம் பகுதியில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளனர். மேலும், தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

**(ஆ) சார்பு நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் 124 சார்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் அதிகார எல்லையானது உரிமையியல் நீதிமன்றச் சட்டம், 1892–ன் படி வரையறுக்கப்பட்டுள்ளது. சார்பு நீதிமன்றங்கள், உரிமையியல் வழக்குகளில் வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.1,00,000/– மேற்பட்டும், ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. தங்கள் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற

முடிவிற்கெதிராக ரூ.1,00,000/– மதிப்புக்குட்பட்டு தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் இந்நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன.

**(இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்**

176 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார எல்லையை பெற்றுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர்.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்**

இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. இம்மாநிலத்தில் 64 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

## 9. குற்றவியல் நீதிமன்றங்கள்

### 9.1 சென்னை மாநகர்

சென்னை மாநகரில் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரின் நிர்வாக கட்டுப்பாட்டில் 30 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 24 பெருநகர குற்றவியல் நடுவர்களும், உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 6 பெருநகர குற்றவியல் நடுவர்களும் (4 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட) அடங்குவர். பெருநகர குற்றவியல் நடுவர்கள் சென்னை மாநகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகளை விசாரிக்கின்றனர்.

### 9.2 வெளியூர் நீதிமன்றங்கள்

#### (அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

30 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில் உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

### (ஆ) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் 194 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. குற்றவியல் நடுவர் நீதிமன்றம், குற்றவியல் நீதி நிருவாகத்தில் கீழ்நிலையில் இயங்கும் நீதிமன்றம் ஆகும். இந்நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வருடத்திற்கு மேற்படாத தண்டனையோ அல்லது அபராதம் ரூபாய் ஐந்தாயிரத்திற்கு மேற்படாமலோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் ஏறத்தாழ இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இயங்கி வருகின்றன.

## 10. சிறப்பு நீதிமன்றங்கள்

### (அ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்

12 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. அவைகளில், சென்னையில் நான்கும், வேலூரில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக இயங்கி வருகின்றன. இவை தவிர, மாநிலத்தின் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் வழக்கு தீர்ப்பாயம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. தொழிலாளர் நல நீதிமன்றம் மற்றும் தொழில்

வழக்கு தீர்ப்பாயம் ஆகியவற்றின் தலைமை அலுவலர்கள் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் உள்ளனர். தொழிலாளர் நல சிறப்பு நீதிமன்றங்கள், அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்புரைக்கின்றன. இந்த தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் வழக்கு தீர்ப்பாயம் ஆகியவைகளின் நீதிபதிகள், அவரவர்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முகாம் நீதிமன்றங்கள் நடத்தி தொழிலாளர் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்புரைக்கின்றனர்.

**(ஆ) பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 ஆகிய சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

இந்நீதிமன்றங்கள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | நீதிமன்றத்தின் பெயர் | மாவட்ட அதிகார எல்லை |
|---|---|---|
| 1. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 2. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) நாகப்பட்டினம்<br>(iii) திருவாரூர் |
| 3. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–II, திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 4. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்–III, மதுரை | மதுரை |
| 5. | மாவட்ட நீதிபதி தரத்தில் சிறப்பு நீதிமன்றம் | விழுப்புரம் |
| 6. | மாவட்ட நீதிபதி தரத்தில் சிறப்பு நீதிமன்றம் | சிவகங்கை |

இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் வரும் வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## (இ) பொருளாதாரக் குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

இச்சிறப்பு நீதிமன்றங்கள், மத்திய சட்டங்களை மீறுவதனால் பதிவாகும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ளன. மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவைகள் முறையே சென்னையில், மாவட்ட நீதிபதி பதவி நிலையில் இரண்டு கூடுதல் முதன்மை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் (பொருளாதாரக் குற்றங்கள்–1 மற்றும் பொருளாதாரக் குற்றங்கள்–2) மற்றும் மதுரையில், முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன.

## (ஈ) குடும்ப நல நீதிமன்றங்கள்

குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டம், 1984–ல் திருமணம் தொடர்பான வழக்குகள், குடும்ப விவகாரங்கள் ஆகியவற்றில் இணக்கத்தை கொண்டு வரவும் மற்றும் வழக்குகளை விரைந்து முடிக்கவும் குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் 20 குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டில், சென்னையில் கூடுதலாக 4 குடும்பநல நீதிமன்றங்கள் தோற்றுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணிபுரியும் வழக்காடுபவர்களின் வசதிக்காக சென்னையில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(உ) தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழானவழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன்படி மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள், பொருளாதார குற்றங்களான வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் பணம் திருப்பிச் செலுத்தாத வழக்குகளில் சொத்துக்களை முடக்கி விற்பனை செய்து வைப்பீடுதாரர்களுக்கு திரும்ப அளித்தல் ஆகியவற்றை பிரத்யேகமாக விசாரிக்கின்றன.

**(ஊ) மத்திய குற்றப்புலனாய்வுத் துறை (CBI) வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

மத்திய குற்றப் புலனாய்வுத் துறையினால் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னையில் ஆறும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா

ஒன்று வீதம் மொத்தம் 8 சிறப்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டுவருகின்றன.

**(எ) ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (மத்திய சட்டம் 49/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஏ) போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு சென்னையில் இரண்டும், மதுரையில் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

**(ஐ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், **1955–**ன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதியின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மொத்தம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஒ) சந்தனக்கட்டை தொடர்பான குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றம்**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ஓ) இரயில்வே நீதிமன்றங்கள்**

இரயில் நிலையங்கள் மற்றும் இரயில்களில் நடைபெறும் குற்றங்கள் மற்றும் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வது தொடர்பான வழக்குகளை இந்திய இரயில்வே சட்டம், **1989–**ன் கீழ் பிரத்யேகமாக விசாரணை செய்ய ஒன்பது இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி

ஆகிய இடங்களிலும் சென்னை எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களுக்கான செலவினத்தை மாநில அரசே ஏற்கின்றது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத்தொகை மாநில அரசின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**ஔ) நடமாடும் நீதிமன்றங்கள்**

மோட்டார் வாகன சட்டம், 1988 (மத்திய சட்டம் 59/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிக்க சென்னையில் இரண்டும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் 12 நடமாடும் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களை அமைத்ததின் மூலம் சிறு வழக்குகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

**க) 1987–ஆம் ஆண்டைய பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (தடா சட்டம்) தொடர்பான சிறப்பு நீதிமன்றங்கள்**

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட

வழக்குகளை விசாரிக்க மாநிலத்தில் நான்கு தனி நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், சென்னையில் பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தின் முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதிகளும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் முதன்மை மாவட்ட நீதிபதிகளும் தடா வழக்குகளை விசாரணை செய்ய சிறப்பு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ங) குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக கூடுதல் அமர்வு நீதிபதி தரத்தில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மத்திய சட்டம் 15/2002)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

**ச) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளுக்கான அமர்வு நீதிமன்றம்**

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**ஞ) மகளிர் நீதிமன்றங்கள் (மகிளா நீதிமன்றங்கள்)**

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களான மகளிரை களங்கப்படுத்துதல், கற்பழிப்பு மற்றும் மத்திய மாநில அரசுகளின் பெண்கள் தொடர்பான சமூக சட்டங்கள் குறித்த வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை மேற்கொள்வதற்காக மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் மகளிர் நீதிமன்றங்கள் (மகிளா நீதிமன்றங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் வீதம் 32 நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில் 10 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. அவற்றில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய எட்டு இடங்களில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**ட) மத்திய குற்றப்பிரிவு மற்றும் மாநகர குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான நீதிமன்றங்கள்**

சென்னை மாநகர மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர

வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய, சென்னையில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் ஒரு புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

**ண) மாலை நேர நீதிமன்றங்கள்**

தேங்கிக்கிடக்கும் சிறு வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து மற்ற நிரந்தர நீதிமன்றங்களின் பணிச்சுமையைக் குறைப்பதுடன், நீதிமன்ற நேரத்தினையும் சேமிக்க மாலை நேர நீதிமன்றங்கள் உதவுகின்றன. இம்மாநிலத்தில் 53 மாலை நேர நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**த) விரைவு நீதிமன்றங்கள்**

தமிழகத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்காக, குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் 50 விரைவு நீதிமன்றங்களை அமைக்க அரசால் ஒப்பளிக்கப்பட்டது. இதில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலுள்ள விரைவு நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைக்கப்பட்டது. மீதமுள்ள, 49 விரைவு நீதிமன்றங்களில், 39 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 10 விரைவு நீதிமன்றங்களை ஏற்கனவே மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இயங்கும் மகளிர்

நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் தலா ஒன்று வீதம் மாற்றி அமைக்கப்பட்டு இந்நீதிமன்றங்கள் கூடுதல் மகளிர் நீதிமன்றங்களென (Additional Mahila Courts) அழைக்கப்படுகின்றன. இந்த பத்து கூடுதல் மகளிர் நீதிமன்றங்களில் எட்டு நீதிமன்றங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர், மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் தேனி, பரமக்குடி, ஆரணி, நாகர்கோவில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் தலா ஒரு விரைவு நீதிமன்றம் உருவாக்க ஒப்பளிக்கப்பட்டு அவற்றில் கும்பகோணம் மற்றும் பரமக்குடி ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**ந) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு ஆகிய வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் ஒன்பது சிறப்பு நீதிமன்றங்களும், சார்பு நீதிபதி பதவித் தரத்தில் பதினெட்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரணை செய்வதற்கென சார்பு நீதிபதி பதவித்

தரத்தில் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் ஆக மொத்தம் **31** சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில், வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**ப) நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்**

நில அபகரிப்பு தொடர்பான புகார்களை விசாரணை செய்வதற்கு, மாநிலத்திலுள்ள அனைத்து நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் **39** நில அபகரிப்பிற்கு எதிராக சிறப்பு பிரிவுகளை ஏற்படுத்த ஆணையிட்டதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான நில அபகரிப்பு புகார்கள் பதிவாயின. இதனைக் கருத்திற் கொண்டும், பொதுமக்களுக்கு விரைவாக நீதி கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடும், இவ்வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பது அவசியமென கருதப்பட்டது. எனவே, சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் உட்பட, மாநிலத்தில் உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் **25** சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த ஆணைகள்

வெளியிடப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை–4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### ம) கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் (Additional Master Courts)

இம்மாநிலத்தில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், நான்கு சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்திலும் உள்ளன. வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு செய்யவும் பணி நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

### ய) அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள்

மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளுக்கிணங்க, தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

## 11. நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம், மதுரையிலுள்ள உயர்நீதிமன்றக் கிளை மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் **2011** ஆம் ஆண்டு முதல் **2015** ஆம் ஆண்டு வரை தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரம் முறையே பிற்சேர்க்கை–**5**, **6** மற்றும் **7**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 12. தமிழ் வழியிலான சட்ட இதழ்

சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில், 'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

## 13. மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

**13.1** மத்திய அரசின் நீதித்துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான "மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கு **2012–13** ஆம் ஆண்டு முதல் **75:25** என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப்பங்கு **2015–2016** ஆண்டு முதல் **60**:40 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**13.2** இத்திட்டத்தின் கீழ் **2006–07** முதல் **2013–14** ஆம் ஆண்டு வரை மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையின் விவரம் கீழ்வருமாறு:–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | ஒப்பளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2006–07 | 245.00 | 251.420 | 496.420 |
| 2. | 2007–08 | 248.00 | 250.852 | 498.852 |
| 3. | 2008–09 | 846.00 | 761.210 | 1607.210 |
| 4. | 2009–10 | 356.00 | 286.560 | 642.560 |
| 5. | 2010–11 | --- | --- | --- |
| 6. | 2011–12 | --- | --- | --- |
| 7. | 2012–13 | 1953.00 | 631.090 | 2584.090 |
| 8. | 2013–14 | 7343.00 | 2447.660 | 9790.660 |
| 9. | 2014 -15 | -- | -- | -- |
| 10. | 2015–16 | -- | -- | -- |
| | மொத்தம் | 10991.00 | 4628.792 | 15619.792 |

13.3 இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்கானது 2010–11 ஆம் ஆண்டிற்கு ரூ.3.37 கோடி மற்றும் 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.14.97 கோடியென உத்தேச ஒதுக்கீடாக அறிவிக்கப்பட்டது. எனினும், மேற்காணும் ஆண்டுகளுக்கான மத்திய அரசின் பங்கானது இதுவரை விடுவிக்கப்படவில்லை. 2013–14ஆம் ஆண்டிற்கு ரூ.7343.00 இலட்சத்தினை மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் தனது பங்காக விடுவித்தது. இம்மாநில அரசும் தனது பங்காக ரூ.2447.66 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து மொத்தம் ரூ.9790.66 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, ஈரோடு மாவட்டம் கொடுமுடி,

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி, நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி, திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல், திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, விருதுநகர் மாவட்டம் சாத்தூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களும், திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி, சென்னை சைதாப்பேட்டை மற்றும் கரூர் மாவட்டம் கரூர் ஆகிய இடங்களில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் மற்றும் விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மத்திய ஆவண வைப்பறை ஆகியன கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் 2016–17 ஆண்டிற்காக ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 14. பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

**14.1** நீதி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டு **13–வது** நிதிக்குழு **5** ஆண்டுகளுக்கு **(2010–15** வரை) தமிழ்நாட்டிற்கு **ரூ.252.44** கோடி வழங்க பரிந்துரைத்தது. மத்திய அரசு

இந்நிதியை பயன்படுத்துவதற்கு கீழ்க்காணும் வகைகளில் வழிகாட்டுதலை பிறப்பித்துள்ளது. **2010–11** முதல் **2014–15** வரையிலான ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| 1. | காலை மற்றும் மாலை நேர நீதிமன்றங்கள் | 123.54 |
| 2. | மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவிகள் | 14.83 |
| 3. | நீதித்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி | 12.35 |
| 4. | அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கான பயிற்சி | 7.41 |
| 5. | புராதன நீதிமன்றக் கட்டடங்கள் | 22.24 |
| 6. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 15.00 |
| 7. | மாற்றுத் தீர்வு மையங்கள் | 40.76 |
| 8. | நீதிமன்ற மேலாளர்கள் | 16.30 |
| | **மொத்தம்** | **252.44** |

### 14.2 பதிமூன்றாவது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்கள்

- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு / நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரிப்பதற்கு மாவட்ட நீதிபதி / சார்பு

நீதிபதி பதவித் தரத்தில் **29** சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.**49.21** கோடி ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.**4.20** கோடி மற்றும் **29** மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாவட்டத்திற்கு ஒரு கோடி வீதம் ரூ.**29.00** கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையிலுள்ள பாரம்பரிய நீதிமன்றக் கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிக்கென ரூ.**22.21** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்கள், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் ரூ.**17.00** கோடி செலவில் கட்டப்பட்டு **21.02.2016** முதல் செயல்பட்டு வருகின்றன.
- நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.**2.47** கோடி வீதம், **2010–11** முதல் **2014–15** வரை ஐந்தாண்டுகளுக்கு மொத்தம் ரூ.**12.35** கோடி ஒப்பளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- சட்ட அறிவு விளக்க முகாம்கள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் மாபெரும் மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கு **2010–11, 2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆகிய ஆண்டுகளுக்கு ரூ.**13.35** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் **13** குடும்ப நல நீதிமன்றங்கள் ரூ.**8.06** கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில், திருவாரூர் தவிர அனைத்து நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.
- நீதிமன்ற மேலாண்மையில் பணிகளை திறம்பட செயல்படுத்த, உதவிப் பதிவாளர் பதவித் தரத்தில் **35** நீதிமன்ற மேலாளர் பணியிடங்களை ஏற்படுத்த ரூ.**7.68** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், கணினி பயிற்சி மற்றும் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை இணையம் மூலம் பெறவும், மேலும் சட்ட

புத்தகங்கள் வழங்கவும் 2012–13, 2013–14 மற்றும் 2014–15 ஆண்டுகளில் ரூ.5,10,78,097/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாவட்ட நீதிபதி / சார்பு நீதிபதி / குற்றவியல் நடுவர் ஆகிய பதவித் தரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று நீதிமன்றங்கள் வீதம் 30 மாவட்டத்திற்கு 90 மாலை நேர நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.3.92 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சமரசம் செய்பவர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் சமரசம் செய்யும் வழக்கறிஞர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்க 2012–2013 ஆண்டுக்கென ரூ.2.79 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 2013–14 ஆண்டுக்கென சமரசம் செய்வோர், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க ரூ.2.65 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் ரூ.1.53 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- கோயம்புத்தூரில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் ரூ.1.36 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- பெரம்பலூர் மாவட்டம் நீங்கலாக மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றமென 31 மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.1.34 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கு விழுப்புரம் மற்றும் சிவகங்கையில் தலா ஒன்று வீதம் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.1.10 கோடி ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல்மனு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு தருமபுரி மாவட்டம் தருமபுரியில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும், சார்பு நீதிபதி பதவித் தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும்

ரூ.1.08 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

- அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு சட்ட புத்தகங்கள் வழங்குவதற்கு 2012–13 மற்றும் 2014–15 ஆண்டுகளுக்கென முறையே ரூ.84,25,300/– மற்றும் ரூ. 82,00,044/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 645 அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் 2011–12 முதல் 2012–13 வரை பணியிடைப்பயிற்சி அளிக்க ரூ.78.87 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவிபுரிய நியமிக்கப்பட்ட 35 தட்டச்சர்கள் மற்றும் 35 அலுவலக உதவியாளர்களுக்கு மாதந்தோறும் முறையே ரூ.12,000/– மற்றும் ரூ.8,000/– தொகுப்பூதியம் வழங்குவதற்கு ரூ.70.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது
- திருப்பூரில் கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு ரூ.34.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- 2011–12 ஆம் ஆண்டுகளில் சென்னையில் செயல்படும் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு

மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.25.71 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் சென்னையிலுள்ள விடுமுறை கால குடும்பநல நீதிமன்ற நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.28.85 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சி கழகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியமான ரூ.15.00 இலட்சம், 2013–14ம் ஆண்டிற்கு மட்டும் ரூ.40.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- குற்ற வழக்குத்தொடர்வு இயக்ககத்தின் வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்காக சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்கு 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.8.95 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்திலுள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துனர்களுக்கும் 71 சட்டங்களை உள்ளடக்கிய கைபேசியில் பயன்படுத்தும் மென்பொருள் வழங்குவதற்கு ரூ.4.83 இலட்சம் 2011–12 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**15. பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை**

தற்பொழுது மத்திய அரசு 14 வது நிதிக்குழுவின் கீழ் விரைவு நீதிமன்றங்கள், கூடுதல் நீதிமன்றங்கள், குடும்பநல நீதிமன்றங்கள், தற்பொழுதுள்ள நீதிமன்றங்களை மாற்றி வழக்காடும் மக்களுக்கு ஏற்ப அமைத்தல், மனித வளங்களை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப உதவி, ஆவணங்களை எண்ணியமயமாக்கல் மற்றும் பணியாளர்களை ஏற்படுத்துதல், மாற்று முறை தீர்வு மையம் மற்றும் மக்கள் நீதிமன்றங்களை அமைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது. மேற்காணும் திட்டங்களுக்காக செலவினத்தை மத்திய அரசு, மாநில அரசுக்கென அதிகரித்துள்ள 10% வரி பகிர்விலிருந்து மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளது. இந்த செலவினங்களுக்காக தனியாக ஒதுக்கீடு எதுவும் 14வது நிதிக்குழுவில் செய்யப்படவில்லை.

பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைப்படி கீழ் கண்டனவற்றிற்கு மாநில அரசின் நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள ஆவணங்களை எண்ணியமயமாக்குவதற்காக ரூ.9,42,87,753/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- தேனி , பரமக்குடி, ஆரணி, நாகர்கோயில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 10 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் (விரைவு நீதிமன்றங்கள்) அமைப்பதற்கு ரூ.5,86,39,990/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் நான்கு குடும்ப நல நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.3,14,94,288/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் பணியாற்ற 108 தொழில்நுட்ப பணியாளர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்களுக்கு சரிவுப்பாதை மற்றும் மின்தூக்கி அமைக்க ரூபாய் 1,31,92,650/ ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 16. நீதிமன்ற மேலாளர்கள்

### நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவிப் பணியாளர்கள்

**16.1** சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 35 நீதிமன்ற மேலாளர் பதவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக உதவி பணியாளர்களை நியமித்துக் கொள்ள 13வது நிதிக்குழுவின் மானியத்தின் ஒரு

பகுதியை, அதாவது ஒரு நீதிமன்ற மேலாளருக்கு அத்தகைய உதவி பணியாளர்களுக்கு சராசரி செலவினமாக மாதம் ரூ.20,000/–க்கு மிகாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, 13–வது நிதிக்குழு பரிந்துரைத்த "நீதிமன்ற மேலாளர்கள்" என்ற திட்டத்தின் கீழ், 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு தலா ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் மாதம் முறையே ரூ.12,000/– மற்றும் ரூ.8,000/– வீதம் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய ஜூன் 2014 முதல் மார்ச் 2015 வரை ரூ.1.19 கோடியினை அரசு ஒப்பளித்துள்ளது. 2014–2015 ஆண்டிற்கு ரூ.70.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற மேலாளர்களின் பதவிக்காலம் 31.3.2015ல் முடிவடைந்த போதிலும் உயர்நீதிமன்றத்தின் வேண்டுகோளை ஏற்று 35 மேலாளர் பணியிடங்களுக்கு மேலும் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாநில நிதியிலிருந்து நீதிமன்ற மேலாளர்களின் 23 உதவிபணியாளர்கள் பணியிடங்களுக்கும் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**நீதிமன்ற மேலாளர்களுக்கு மடிக்கணினி**

**16.2** நீதிமன்றங்களின் நிருவாக கடமையினை செவ்வனே ஆற்றவும், நீதித்துறை பணிகளில் முழுக்கவனத்துடன் அதிக நேரத்தை அர்ப்பணித்து

செயல்படவும் நீதிபதிகளுக்கு உதவி புரிந்திட 35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட நீதிமன்றங்களில் புள்ளி விவரங்கள் சேகரித்தல், சேகரித்த விவரங்களை ஆராய்ந்து அறிதல், அதனை சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதிகள் முன்வைத்து அதனை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் போன்ற பல பணிகளை மேற்கொள்வது நீதிமன்ற மேலாளரின் பங்காகும். எனவே, 35 நீதிமன்ற மேலாளர்களின் உபயோகத்திற்காக 10 GB மற்றும் இரண்டு வருட திட்டத்துடன் கூடிய தகவல் அட்டைகள் கொண்ட 35 மடிக்கணினிகள் வழங்குவதற்கு ரூ.24,07,775/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**17. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்**

17.1 ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமானது, தேசிய கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் நம் நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட/ சார்நிலை நீதிமன்றங்களில் கணினிமயமாக்கும் திட்டங்களின் ஒன்றாகும். உச்சநீதிமன்றத்தின் மாண்புமிகு மின் செயற்குழுவினால் (e Committee) “தேசிய கொள்கை மற்றும் இந்திய நீதித்துறையில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் நடைமுறைபடுத்துதல் –2005” யினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டத்திற்கு வழிகாட்டுதல் மற்றும்

தேவையான உத்திகளை வழங்குவதற்காக மத்திய அரசின் நீதித்துறை செயலரின் தலைமையின் கீழ் ஒரு அதிகார குழு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தேசிய தகவல் மையத்தின் வாயிலாக நடைமுறைபடுத்தப்படுகிறது. திட்ட கண்காணிப்பு குழுவில் இடம் பெற்றுள்ள நீதித்துறை, மாண்புமிகு மின் செயற்குழுவின் பிரதிநிதி மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கண்காணிப்பதற்கு மாதம் ஒரு முறை கூடுகிறது. ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும், இத்திட்டம் நடைமுறைப் படுத்துவதை கண்காணிப்பதற்கு அந்தந்த நீதிமன்றங்களில், ஒரு வழிகாட்டும் குழு (Steering Committee) அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக தேசிய தகவல் மையம், புதுதில்லி, ரூ.**4.18** கோடியை மூன்று தவணைகளில் வழங்கியது. கணினி சர்வர் அறை மற்றும் நீதித்துறை சேவை மையம் ஆகியவைகளை அமைப்பதற்குரிய இடம் தேர்வு செய்யப்பட்டு தேசிய தகவல் மையத்தால் வழங்கப்பட்ட கணினிகள், சர்வர், UPS, அச்சுப்பொறிகள் மற்றும் அதன் உபபொருட்கள் அனைத்தும் மாவட்டத் தலைமையிடங்களில் நிறுவப்பட்டன. தகவல் தொழில் நுட்பம் (ம) தொலைத் தொடர்புகளை மாவட்ட, தாலுக்கா நீதிமன்றங்கள் மற்றும் கீழ்நிலை நீதிமன்றங்களில் செயல்படுத்துவதே கணினிமயமாக்கலின் முக்கிய

குறிக்கோளாகும். இத்திட்டம், கணினி வன்பொருள், மென்பொருள் மற்றும் வலைதளங்களை அமைத்து மாவட்ட மற்றும் தாலுக்கா நீதிமன்றங்களில் அன்றாடம் நடைபெறும் பணிகளை சிறப்பாக செயல்படுத்த உதவுகிறது. முக்கிய பணிகளான வழக்கு தொடுத்தல், ஒதுக்கீடு, பதிவு, அவற்றின் நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் போன்றவைகளை இதன் மூலமாக பெறலாம். விசாரணைக்காக பட்டியலிடப்படும் வழக்குகள், வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவற்றை வழக்காடும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நீதிமன்ற வலைத்தளத்தில் பெறமுடியும். இத்திட்டத்தின் நோக்கமானது 24 மணிநேரமும் வழக்கு தொடர்பான நம்பத்தகுந்த தகவல்களை பெறுவதற்கு ஒரு தேசிய அளவிலான இணையதளம் அமைப்பதாகும்.

17.2 இத்திட்டம், மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான பயிற்சி, நீதிபதிகளுக்கான இணையதள வசதிகள், நீதிமன்ற வளாகங்களுக்கான இணையதள இணைப்புகள், காணொளி கலந்துரையாடல் வசதி, இடம் தேர்வு, வன்பொருள், இணைய கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பயன்பாடு, தொழில்நுட்ப மனிதவளம், தகவல் தொழில் நுட்ப

மற்றும் தொலை தொடர்புகளை தரம் உயர்த்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டதாகும். தேசிய தகவல் மையம் (NIC), இத்திட்டத்தை செயல்படுத்தும் ஒரு முகமையாக உள்ளது. மாவட்ட நீதிபதியின் தலைமையின் கீழ், மாவட்டம் முழுவதும் தாலுக்கா நீதிமன்றம் உட்பட இத்திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணிக்க ''மாவட்ட வளர்ச்சி கண்காணிப்பு குழு'' வில் தேசிய தகவல் மையத்தின் பணியாளர்கள் மாவட்ட அளவில் கண்காணித்து வருகிறார்கள். உயர்நீதிமன்றம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிர்வகிக்க தொழில்நுட்ப பணியாளர்களை நியமித்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள்கள்–

1. நீதிமன்றங்களில் தினந்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக செயல்படுத்த உதவுதல்.
2. நிலுவையிலுள்ள வழக்குகளை குறைக்க நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்
3. வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல்களை அளித்தல்
4. நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தகவல்களை பெற வழி ஏற்படுத்துதல்.

**உயர்நீதிமன்றத்தில் கணினிமயமாக்கல் (சென்னை மற்றும் மதுரை கிளை)**

**17.3** அனைத்து நீதிபதிகளுக்கும் மடிக்கணினிகள், கணிப்பொறிகள், அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற வலைதள இணைப்பு ஆகியவை அவர்களின் இல்ல அலுவலகங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர்நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**17.4** வழக்குகளின் தகவல் குறிப்புகளை கண்காணிக்கவும் மற்றும் தேவையான மென் பொருள்களை உருவாக்கவும் தேசிய தகவல் மையத்தின் கிளை (NIC) உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ளது. கணினி மூலம் தினந்தோறும் வழக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு இணைய தளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளையில் வழக்கு தொடுப்பவர்களும், வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளின் நிலை பற்றி தெரிந்துகொள்ள மின்னணு பலகை வைக்கப்பட்டுள்ளது. இம்மின்னணு

பலகைகளை புதியதாக தற்போதைய தொழில் நுட்பத்திற்கு தகுந்தவாறு மாற்றுவதற்கு அரசு ரூ.1.88 கோடி ஒப்பளித்துள்ளது.

**சார்நிலை நீதிமன்றங்களில் கணினிமயமாக்கல்**

**17.5** அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற வலைத்தள இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. **42** மாவட்ட நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்பு மற்றும் அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் தனியான அடையாள எண் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் கணிப்பொறி தொழில்நுட்ப பணிக்கென ஒரு கணிப்பொறி அலுவலர் மற்றும் இரு கணிப்பொறி உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளனர். கணினி வன்பொருள் அனைத்து நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**18. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்**

தமிழ்நாடு மாநில நீதித்துறையில், **2009–2012** ஆம் ஆண்டுகளில் இருந்த மிக அதிகமான காலிப்பணியிடங்களில், **178** நபர்கள் நேரடி நியமனம் மூலம் உரிமையியல் நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டனர். **2013–14** ஆண்டுகளுக்கான காலிபணியிடங்களில் **141** நபர்கள் உரிமையியல் நீதிபதிகளாக நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**19. நீதித்துறை பயிற்சிக் கழகம்**

**19.1** தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் **23.04.2001** அன்று நிறுவப்பட்டது. நீதித்துறை பயிற்சிக் கழக கட்டடமானது ரூ**4.50** கோடி செலவில் கட்டப்பட்டு, **25.07.2004** அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சிக்கழகமானது சென்னை உயர்நீதிமன்ற நிருவாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கழகத்தின் நோக்கமானது மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறைப்பணியாளர்கள் மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகள் போன்ற நீதித்துறை அலுவலர்களுக்கு வளர்ந்து வரும் சட்டம், சமூகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக பயிற்சி வழங்குவது ஆகும்.

**19.2** நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு **2006**ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.**15.00** இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகின்றது. **13–**வது நிதிக்குழுவால் காலை/மாலை நேர நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி **2013–14** ஆம் ஆண்டிற்கு மட்டும் இம்மானியம் ரூ.**15.00** இலட்சத்திலிருந்து ரூ.**40.00** இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**19.3** நீதித்துறை அலுவலர்களுக்கு ஆண்டு முழுவதும் பயிற்சிகள் திறம்பட வழங்கி வருவதால், இப்பயிற்சிக் கழகத்தினை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் ரூ.**21.80** கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. பணியாளர்கள், கூடுதல் வசதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.**6.30** கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட இரு மையங்களும் **21.02.2016** முதல் செயல்பட்டு வருகின்றன.

## 20. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

இந்தியாவில் நான்கு மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியே பயன்பாட்டில் உள்ளது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை **11.10.2012** அன்று நடந்த உச்சநீதிமன்ற முழு நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், இது இம்மாநிலத்தின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் விருப்பமாக இருப்பதால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி

வருகிறது. தற்பொழுது மத்திய அரசு தனது 08.09.2015 நாளிட்ட கடிதத்தில் இக்கோரிக்கையை உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு முன் வைக்கப்படும் என தெரிவித்துள்ளது.

**21. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி**

வழக்குரைஞர்கள் நலன் கருதி இறந்த வழக்குரைஞர்களின் சட்டமுறையிலான வாரிசுதாரர்களுக்கு / நியமனதாரர்களுக்கு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வழக்குரைஞர்களின் நலநிதியினை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ரூ.4 கோடி அரசின் மானியமாக ஒப்பளிக்கப்பட்டு வருகிறது.

**22. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி**

இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களுடைய நியமனதாரர்கள் / அவரை சார்ந்தவர்களுக்கு தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நலநிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவியினை உயர்த்துமாறு அரசிடம் கோரிக்கை வைத்து வழக்குரைஞர்கள் குழுமத்தால் தீர்மானம்

இயற்றப்பட்டது. வழக்குரைஞர்களின் எழுத்தர்களுடைய நலன் கருதி இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நியமனதாரர்களுக்கு / அவரை சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.50,000/–லிருந்து ரூ.2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**23. மாண்புமிகு நீதிபதிகளுக்கு வாகன வசதி அளித்தல்**

சென்னை உயர்நீதிமன்ற 60 நீதிபதிகளுக்கு 60 ஸ்கோடா மகிழுந்து வாங்குவதற்கு ரூ.12.11 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**24. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்**

நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டுக்கு 2011–12 முதல் 2015–16 வரை ரூ.511.66 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2015–16–ம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்கான இதர உட்கட்டமைப்பு வசதிகள் செய்ய நிதி ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:-

- தருமபுரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.3420.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திருச்சி மாவட்டம் மணப்பாறையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.780.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..
- திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.723.40 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.709.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.656.67 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் நீதிபதிகள், பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக கழிவறை வசதி செய்வதற்கு ரூ.566.21 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.471.90 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ எழும்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் கூடுதல் பகுதி கட்டுவதற்கு ரூ.461.33 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.374.38 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ஆகியவை ரூ.364.10 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ எழும்பூரிலுள்ள கூடுதல் பெருநகர நீதிமன்ற வளாகத்தில் சென்னைக்கு அலுவல் தொடர்பான பணிகளுக்கு நீதிபதிகள் வரும் போது தங்குவதற்கு விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு ரூ.363.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுகுன்றத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.**348.70** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலியில் 7 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கட்டுவதற்கு ரூ.**346.70** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.**339.00** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.**248.60** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- நாமக்கல்லில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி–II ஆகியோருக்கான குடியிருப்புகள் ரூ.**153.70** இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மதுரையிலுள்ள மாவட்ட நீதிமன்றக் கட்டடத்திற்கு மின்னாக்கி வசதி செய்வதற்கு ரூ.131.90 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில், 13 நபர்கள் பயணிக்ககூடிய KONE மின்தூக்கி மற்றும் இரண்டு 200 KVA டீசல் மின்னாக்கி வாங்குவதற்கு ரூ.114.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.107.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..
- சென்னை உயர்நீதிமன்ற இணைப்பு கட்டடத்தின் பின்பகுதியில் (கிழக்கு) கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூ.75.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..
- திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் உட்புறம் மற்றும் வெளிப்புறம் வசதிகள் செய்வதற்கு ரூ.48.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் குற்றவியல் நடுவர் நீதிபதி–II குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.48.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..

- ❖ சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பாதுகாப்பு வசதி செய்யவும் மற்றும் அணுகு சாலை அமைக்கவும் ரூ.43.22 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..

- ❖ இராமநாதபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு தார் சாலை அமைக்க ரூ.33.88 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடத்தில் மின்தூக்கி மற்றும் குளிர்சாதன வசதி செய்வதற்கு ரூ.20.76 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி குடியிருப்பு கட்டுவதற்கு கூடுதல் ஒப்பளிப்பாக ரூ.14.11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை எழும்பூரிலுள்ள பெருநகர நீதிமன்றங்கள், அலுவலகங்கள் மற்றும் அறைகலன்கள் முதலானவற்றை அல்லிகுளம் வணிகவளாகத்திற்கு மாற்றுவதற்கு ரூ.11.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ கிருஷ்ணகிரியில் முதன்மை மாவட்ட நீதிபதி குடியிருப்புக்கு சுற்றுசுவர் கட்டுவதற்கு ரூ.**6.44** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலுள்ள மாண்புமிகு நீதிபதிகளுக்கான **15** குடியிருப்புகளுக்கு குளிர்சாதன வசதி செய்வதற்கு ரூ.**6.10** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..

❖ சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள காவலரின் கட்டுப்பாட்டு அறை அருகில் சிறை கைதிகள் அறை கட்டுவதற்கு ரூ.**4.70** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது..

## 25. புதிய நீதிமன்றங்கள்

இவ்வரசு, **2011–12, 2012–13, 2013–14 , 2014–15** மற்றும் **2015–16** ஆம் ஆண்டுகளில் **223** புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்த ஒப்பளிப்பு செய்துள்ளது. **2015–16** ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்ட புதிய நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

**சிறப்பு நீதிமன்றங்கள்**

| | |
|---|---|
| ➢ சென்னையில் குடும்ப நல நீதிமன்றங்கள் | 4 |
| ➢ மாவட்ட நீதிபதி தரத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் (விரைவு நீதிமன்றங்கள்) தேனி, பரமக்குடி, ஆரணி, நாகர்கோயில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூார் மற்றும் காஞ்சிபுரம் | 10 |
| ➢ உரிமையியல் அதிகாரத்துடன் சிறப்பு நடுவர் நீதிமன்றங்கள் இலுப்பூர் மற்றும் மடத்துக்குளம் | 2 |

**பிற நீதிமன்றங்கள்**

| | |
|---|---|
| ➢ தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், கடலூார் மாவட்டம் திட்டக்குடி, மதுரை மாவட்டம் திருமங்கலம் மற்றும் திருச்சி மாவட்டம் துறையூர் ஆகிய இடங்களில் சார்பு நீதிமன்றங்கள் | 04 |

- மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, கோயம்பத்தூர் மாவட்டம் சூலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி, சேலம் மாவட்டம் ஒமலூர், நாமக்கல் மாவட்டம் பரமத்தி, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் — 7

- விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, மதுரை மாவட்டம் மதுரை (3 நீதிமன்றங்கள்), மற்றும் திருமங்கலம், கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் (2 நீதிமன்றங்கள்) மற்றும் திருச்சி மாவட்டம் மணப்பாறை ஆகிய இடங்களில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் — 8

- புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, நாமக்கல் மாவட்டம் பரமத்தி, சேலம் மாவட்டம் ஒமலூர், காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் மற்றும் — 18

ஆலந்தூர், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர், விருதுநகர் மாவட்டம் சிவகாசி, கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம், அரியலூர் மாவட்டம் அரியலூர், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மற்றும் திருப்பூர் மாவட்டம் திருப்பூர் (2 நீதிமன்றங்கள்) மற்றும் ஈரோடு மாவட்டம் பவானி ஆகிய இடங்களில் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

**மொத்தம்** **53**

**26. 2015–16 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட பிற வசதிகள்**

- சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை **42** லிருந்து **60** ஆக உயர்த்தப்பட்டதன் காரணமாக சென்னை உயர்நீதிமன்றத்திற்கு **429** கூடுதல் பணியாளர்கள் ரூ.**11,55,77,736/–** செலவினத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- உயர் நீதிமன்ற வளாகம் மற்றும் எக்மோர், ஜார்ஜ் டவுன் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள

பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களின் பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Camera) மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க ரூ. 7,68,00,590/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ மாநிலத்தில் உள்ள 310 மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள நீதிமன்றங்களின் பயன்பாட்டிற்காக கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் வாங்க ரூ. 4,50,00,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 60 லிருந்து 75 ஆக உயர்த்தப்பட்டதன் தொடர்பாக கூடுதலாக 15 நீதிபதிகளுக்கான 15 மகிழுந்து வாங்குவதற்கு ரூ.2.77 கோடியும், 94 புதிய பணியிடங்கள் உருவாக்குவதற்கு ரூ.2.55 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ மாவட்ட சட்டப் பணிகள் குழுவிற்கு முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் 20 செயலாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க வருடத்திற்கு ரூ.1,80,22,088/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னையில் உள்ள நகர உரிமையியல் நீதிமன்ற பயன்பாட்டிற்காக சர்வர்கள், டெஸ்க்டாப், கணினி,

அச்சுபொறிகள், லேசர் ஜெட்பிரிண்டர்ஸ் மற்றும் யுபிஎஸ் வாங்குவதற்கு **ரூ.1,75,00,000/-** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒன்பது அடுக்கு புதிய கட்டடத்தில் இரண்டு தளங்களில் பதிவேடுகளை பாதுகாப்பதற்கான Compactor / Optimizer வாங்குவதற்காக **ரூ.2,33,59,430/-** ஒப்பளிக்கப் பட்டுள்ளது.
- ❖ சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள அனைத்து ஆவணங்களையும் எண்ணியமயமாக்குவதற்காக விளம்பர செலவு, கட்டுமானப்பணி, மின்இணைப்பு தேவையான தகவல் தொழில்நுட்ப கருவிகள், கணினிகள், மின்சாதன பொருட்கள் லேன் வசதி செய்வதற்கு **ரூ.1,03,86,693/-** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ மாநிலத்தில் உள்ள 157 நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக புதிதாக 157 மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்க ரூ. **91,71,422/-** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வாங்குவதற்கு **ரூ.75,09,199/-** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 137 உரிமையியல் நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காக ரூ.52,00,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு வழக்கறிஞர் மற்றும் குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகங்களுக்கு மரச்சாமான்கள், கணினி மற்றும் இதர கருவிகள் வாங்குவதற்கு ரூ.46,97,191/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நீதிமன்ற அலுவலக பயன்பாட்டிற்கும் மற்றும் நீதிபதிகளின் அறைகளில் பயன்பாட்டிற்கும் அனைத்தும் அடங்கிய 40 கணிப்பொறிகள் மற்றும் அதனுடனான யுபிஎஸ் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ.36,96,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ 60 உயர்நீதிமன்ற நீதிபதிகளின் இல்லங்களுக்கு எபக்ஸ் (EPABX Board) பொருத்துவதற்கு ரூ.33,62,100/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ சேலத்தில் செயல்பட்டு வரும் பல்வேறு நீதிமன்றங்களுக்கு 26 ஒளிநகல் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.31,37,925/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகளின் மாளிகைகளுக்கு மின் உபகரணங்களைப் புதுப்பிப்பதற்காக ரூ.28,00,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இரண்டு பதிவாளர் பணியிடங்கள் ரூ.26,76,216/– தொடர் செலவினத்தில் தோற்றுவிக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளைகளுக்கிடையே காணொளிக் காட்சி வசதிகளை ஏற்படுத்துவதற்காக 2 Mbps செயல்திறன் கொண்ட கருவி வாங்க ரூ.24,72,444/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது .
- ❖ சென்னையில் இயங்கி வரும் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்களின் அலுவலர்களுக்கு 2016–2017–ஆம் ஆண்டுக்கு தொகுப்பூதியம் ரூ.23,69,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ மாநிலத்தில் உள்ள 204 நீதிமன்ற வளாகங்களுக்கு இணையதள வசதி (Virtual Private Network) நிறுவுவதற்கு ரூ.23,45,347/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு **10** ஸ்கேனர்கள் (Scanner) வாங்குவதற்கு ரூ.**23,30,000/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது

- ❖ புதியதாக நியமனம் செய்யப்பட்ட **23** மாவட்ட நீதிபதிகள் மற்றும் **11** உரிமையியல் நீதிபதிகளுக்கு **34** மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் வாங்குவதற்கு ரூ.**21,19,955/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது

- ❖ சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அமைந்துள்ள நூலகங்களுக்கு சட்ட புத்தகங்கள் மற்றும் சட்ட இதழ்கள் வாங்குவதற்கு ரூ.**20,37,000/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது
- ❖ சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் அமைந்துள்ள அரசு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணினி, அதன் உபபொருட்கள் மற்றும் ஒளிநகல் கருவிகள் வாங்க ரூ.**19,36,000/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் பயன்பாட்டிற்காக மேம்படுத்தபட்ட இணையதள வசதி வழங்க (From 4 MBPS to 20 MBPS Leased line) ரூ. **19,30,720/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் 20,000 மாதாந்திர நாட்காட்டிகள் வாங்குவதற்காக ரூ.14,54,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூரில் நடைப்பெற்ற கோயம்புத்துார் மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகங்களின் மண்டல மையம் தொடக்க விழா செலவினத்திற்கு ரூ.14,00,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு 10 தொடுதிரை உபகரணங்கள் மற்றும் அதன் மதுரை கிளை பயன்பாட்டிற்கு 5 தொடுதிரை உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.13,72,958/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- உயர் நீதிமன்றத்தில் பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்ட மத்திய தொழில் பாதுகாப்பு படையின் (CISF) பணி திறம்பட செயல்படுவதற்காக அலுவலக மற்றும் யூனிட் லைன் பராமரிப்பு செலவு, பொழுதுபோக்கு செலவு அலுவலக உபகரணங்கள் மற்றும் நுகர் பொருட்கள், தொலைப்பேசி கட்டணம், தபால் டக் டிக்கட் மற்றும் இதர செலவினங்கள் மற்றும் அதன் பாதுகாப்பு நாய்குழு பராமரிப்பு ஆகியவற்றிற்காக ரூ. 10,80,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர், விருதுநகர் மாவட்டம் கோவில்பட்டி, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம், சிவகங்கை மாவட்டம் சிவகங்கை, நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், சேலம் மாவட்டம் சேலம், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, உதகமண்டலம் மாவட்டம் நீலகிரி, தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்கு ஒளிநகல் இயந்திரம் மற்றும் பிற உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.10,19,675/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மெட்ராஸ் வழக்கறிஞர்கள் சங்கம், மெட்ராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் பெண்கள் வழக்கறிஞர்கள் சங்கத்தில் வழக்குகளின் விவரங்களை காட்டும் 3 ஒளி திரைகள் (Display Boards) நிறுவுவதற்கு ரூ.10,07,782/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ திருவள்ளூர் மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு இணையதள

வசதி (Local Area Network) நிறுவதற்கு ரூ. **9,97,353/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை எழும்பூரில் இயங்கி வரும் பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் XXI மற்றும் நிறுவுவதற்கு XXII ஆகியவற்றிற்கு தலா ஒரு பதிவுரு எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க ரூ.**9,55,800/–** செலவினத்தில் ஒப்பளிக்கப் பட்டுள்ளன.

- ❖ உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் பயன்பாட்டிற்காக இணையதள வசதி (**20** MBPS OFC Leased Line Circuits) வழங்க ரூ.**9,31,092/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ அல்லிக்குளம் வணிக வளாகத்தில் இயங்கி வரும் மாநகர குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ரூபாய் **8,78,535/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள அரசு வழக்குத் துறை அலுவலகத்திலிருந்த குளிர்சாதன இயந்திரங்களை புதியதாக கட்டப்பட்டுள்ள சட்ட அலுவலர் கட்டடத்திற்கு மாற்றம் செய்து பொருத்த ரூ.**8,75,000/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது

- கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் இயங்கி வரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு தட்டச்சர் பதவி ஒன்றும், ஆராய்வாளர் பதவி ஒன்றும், ரூ.8,22,456/– செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூரில் இயங்கி வரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் உள்ள தலா ஒரு தட்டச்சர் பணியிடம் சுருக்கெழுத்து–தட்டச்சர் பதவியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்தின் பயன்பாட்டிற்காக 12 புதிய கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குவதற்காக ரூ.7,60,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் பயன்பாட்டிற்காக 100 டோனர்ஸ் (Toners) வாங்குவதற்காக ரூ.6,54,255/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர்களுக்கு 6 ஆல் இன் ஒன் கணிப்பொறிகள் மற்றும் 6 யுபிஎஸ் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ.6,28,346/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர்களுக்கு 6 ஆப்பிள் ஐ பேடு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.4,25,799/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் 2011–2014 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை (500 எண்ணிக்கை) வெளியிட ரூ.3,70,350/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் இயங்கி வரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் I மற்றும் II ஆகியவற்றிற்கு அறைகலன்கள் வாங்க ரூ.3,67,400/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு 2 தானியங்கி பைன்டிங் இயந்திரம் மற்றும் ஒரு கனரக தானியங்கி வயர் பைண்டிங் இயந்திரம் வாங்குவதற்கு ரூ.3,55,900/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மதுரையில் செயல்பட்டு வரும் விரைவு நீதிமன்றம் I மற்றும் IIக்கு ஒளிநகல் இயந்திரம் வாங்க ரூ. 2,42,441/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மதுரையில் உள்ள போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் வழக்குகளுக்கான இரண்டு சிறப்பு நீதிமன்றங்களுக்கு

தலா ஒரு ஒளிநகல் கருவி வாங்குவதற்காக ரூ. 2,42,000/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை தாலுக்காவில் உள்ள புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு இணையதள வசதி (Local Area Network) நிறுவுவதற்கு ரூ. 2,36,430/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒரு தட்டச்சர் பணியிடம் ரூ.1,96,800/- செலவினத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை ஜார்ஜ் டவுனில் இயங்கி வரும் III, VII, VIII, XV மற்றும் XVI பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ரூ. 1,90,370/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக்கழகத்திலுள்ள பழுதுபட்ட மரச்சாமான்களை சரிசெய்வதற்காக ரூ.1,88,580/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ தேனி மாவட்டத்தில் உள்ள பெரியகுளத்தில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு

இணையதள வசதி (LAN) நிறுவுவதற்கு ரூ.1,74,050/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ உயர் நீதிமன்றத்தில் அமர்த்தப்பட்ட மத்திய தொழில் பாதுகாப்பு படையின் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 தொலைபேசி இணைப்புகளுடன் இரு இணையதள வசதியும் மற்றும் 15 சிம் கார்ட் (SIM card) வசதியும் செய்வதற்காக ரூ. 1,44,562/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்திற்கு ஒளிநகல் கருவி வாங்குவதற்காக ரூ. 1,21,221/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள பத்திரிக்கை பிரிவிற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.1,21,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது
- ❖ மதுரையில் உள்ள மத்திய குற்றப்புலனாய்வுத்துறை வழக்குகளை விசாரிப்பதற்காக இயங்கி வரும் II வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்காக ஒளி நகல் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.1,21,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னையில் இயங்கி வரும் தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் 1997–ன் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.1,18,193/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூடுதல் தலைமை வழக்குரைஞர்–I அலுவலகத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.76,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் இயங்கி வரும் மத்திய குற்றப்புலனாய்வுத்துறை வழக்குகளை விசாரிக்கும் XIவது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.74,109/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள சமரச தீர்வு மையத்திற்கு இரு நேரடி தொலைபேசி இணைப்புகள் வழங்க ரூ.62,472/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- பிறப்பு, இறப்பு பதிவுகளில் செய்யப்படும் முறைகேடுகளை முறைப்படுத்த, உயர்நீதி மன்றத்தால் ஆணையாளராக நியமிக்கப்பட்ட, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி

திரு.மோகன்தாஸ் அவர்களுக்கு ரூ.50,000/– மதிப்பூதியம் வழங்கி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள மத்திய புலனாய்வு நீதி மன்ற நிர்வாக அலுவலகத்திற்கு ஒரு புதிய தொலைபேசி இணைப்பு வசதிக்காக ரூ. 31,780/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மின் இதழினை புதுப்பித்தல் / மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான செலவு உயர்ந்ததன் பொருட்டு அரசு தலைமை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கூடுதலாக ரூ.25,400/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- உயர் நீதிமன்ற மதுரை கிளையின் பதிவாளர் (நீதித்துறை) இல்ல பயன்பாட்டிற்காக ஒரு புதிய தொலைபேசியுடன் இணையதள வசதி வழங்க ரூ.19,227/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் பிரிவில், நேர்முக உதவியாளர்களின் பயன்பாட்டிற்கு ஒரு புதிய தொலைபேசி வசதியுடன் இணையதள வசதி வழங்க ரூ. 14,070/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- உயர் நீதிமன்ற மதுரை கிளையின் மரபு பிரிவின் பயன்பாட்டிற்காக ஒரு புதிய இணையதள வசதி வழங்க ரூ.11,125/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் துணை பதிவாளர் மற்றும் கூடுதல் தனி செயலாளரின் பயன்பாட்டிற்காக ஒரு புதிய தொலைபேசி வசதி வழங்க ரூ. **9,208/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ உயர்நீதிமன்ற துணை பதிவாளரின் (CLAA) இல்லத்திற்கு ஒரு புதிய தொலைபேசி வசதி வழங்க ரூ. **9,088/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ உயர்நீதிமன்றத்தில் உள்ள சட்ட தமிழ் நாளிதழ் அலுவலகத்திற்கு ஒரு புதிய இணையதள வசதி வழங்க ரூ.**8,452/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் தனிச்செயலாளர் மற்றும் பதிவாளர் பயன்பாட்டிற்காக ஒரு புதிய இணையதள வசதி வழங்க ரூ.**8,452/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ உயர்நீதிமன்ற சம்பள பிரிவுக்கு ஒரு புதிய இணையதள வசதி வழங்க ரூ. **8,344/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை உயர் நீதிமன்ற இணை பதிவாளரின் (கணினி) பயன்பாட்டிற்காக ஒரு புதிய சிம் கார்ட் வசதி வழங்க ரூ. **7,188/–** ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 27. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

### நோக்கம்

27.1 சட்டப் பணிகள் ஆணைக் குழு (1994–ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது) சட்டம், 1987, சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாகவும், சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் இயற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்த மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்டசட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள் ஆகியவை அமைக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அமைப்பு**

27.2 மேற்கண்ட சட்டத்திற்கு இணங்க, மாநில அளவில் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுமையுமாக எங்கெல்லாம் நீதிமன்றங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 29 மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுக்களும், 150 வட்ட சட்டப் பணிகள் குழுக்களும் மற்றும் 2 உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி பெற தகுதியுடையோர்**

27.3 சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:–

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப்பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டுள்ள மனிதர்களை விற்பதும், வாங்குவதும், வற்புறுத்தி வேலை வாங்குவதால் பாதிக்கப்பட்ட நபர் (அல்லது) பிச்சை எடுப்பவர்கள்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்று திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள் உட்பட

(viii) சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12(எச்)ல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு ட்பட்டவர்கள்.

சட்ட உதவி வேண்டுபவர்கள் எந்தவித நீதிமன்றக் கட்டண வில்லை இல்லாமல் தங்களது கோரிக்கைகளை மனு

வடிவில் அளிக்கலாம். எழுத்தறிவில்லாதவர்கள் வாய் மொழியாக தங்களது கோரிக்கைகளை அளிக்கலாம். அவை சட்டப் பணிகள் ஆணைக்குழு அலுவலரால் அல்லது குழுவால் மேல் நடவடிக்கைக்காக பதிவு செய்து கொள்ளப்படும்.

## 27.4 ஆலோசனை மற்றும் சமரச மையம்

மாநிலத்தில், ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு காண ஒரு கருவியாக இயங்கி வருகின்றன. ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர் இருதரப்பினருக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார். இவ்வாறு, பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கின்ற ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

### மகளிருக்கான மையங்கள்

27.5 சமூகத்தின் நலிந்த பிரிவினரான பெண்களுக்கு அவர்களது திருமணம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் இதர பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு மகளிருக்கான மையங்கள் மூலம் உதவிகள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

**27.6** குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசால் அளிக்கப்படும் சமூக நலத்திட்டங்களான முதியோர் ஒய்வூதியம், விதவைகள் ஒய்வூதியம் போன்ற உதவிகளை அரசிடமிருந்து பெறுவதற்கும், சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் வழங்குகின்றன.

**மக்கள் நீதிமன்றம்**

**27.7** எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது அந்த நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற ஆனால் வழக்காகத் தாக்கல் செய்யப்படாத எந்த பொருள் பற்றியும் அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு உடன்பாடு அல்லது தீர்வுக்கு வருவதற்கு மக்கள் நீதிமன்றங்கள் உதவி செய்கின்றன.

**சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்**

**27.8** ஊரகப் பகுதிகளில் சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்கள் குறிப்பிட்ட காலமுறைப்படி

நடத்தப்படுகின்றன. வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் இந்த முகாம்களில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்படும் வழக்கறிஞர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவதோடு, மனுக்கள்மீது சட்டஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். மனுதாரர்களின் மனுக்கள், இம்முகாம்களில் கலந்து கொண்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு முடியுமானால் அந்த இடத்திலேயே உடனடித் தீர்வு காணப்படுகிறது.

**மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்**

27.9 சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறையிலும் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு

அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. **31.12.2015** வரை **3,511** மக்கள் சிறை நீதிமன்றங்கள் நடத்தப்பட்டு **18,318** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

**27.10** இத்திட்டத்தின்படி, குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு ஆஜர்படுத்தப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிக்க சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் வழக்குரைஞர்கள் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. காவலில் உள்ள நபர்களுக்கு பின்வரும் மூன்று நிலைகளில் இந்த திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது:

I. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும் உதவுகிறது

II. காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கான சட்ட உதவி

III. பாதகமான உத்திரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கான சட்ட உதவி

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

27.11 உரிமையியல் நடைமுறை விதிகள் தொகுப்பு பிரிவு 89–ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாற்று முறைத் தீர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கும் இணைப்பு பாலமாக செயல்படுகின்றன. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.20 கோடியும், மீதமுள்ள 29 நீதித்துறை மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.29.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தேனி, திருவாரூர், திண்டுக்கல், மதுரை, நாமக்கல், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவள்ளூர், ஸ்ரீவில்லிபுத்தூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், ஈரோடு, தஞ்சாவூர் மற்றும் சிவகங்கை ஆகிய 25 மாவட்டங்களில் இம்மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. நீலகிரி,

கோயம்புத்தூர், கரூர், புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய இடங்களில் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நிரந்தர மக்கள் நீதிமன்றம்**

27.12 சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 22 பி– ன்படி, இம்மாநிலத்தில் நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிரந்தர மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த ரூ.7,70,70,784/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**தேசிய மாபெரும் மக்கள் நீதிமன்றம்**

27.13 தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் நாடு முழுவதும் உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் 06.12.2014 அன்று நடத்தப்பட்டு 24,73,212 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.2081,48,73,918/–க்கு தீர்வு காணப்பட்டது.

தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் ஒவ்வொரு மாதமும் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டில் 11,40,088 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.2296,49,44,536/–க்கு தீர்வு காணப்பட்டது.

**தொலைபேசி வழி சட்ட உதவி**

**27.14** சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும், வழக்கறிஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகிறார்கள். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் **044–25342441** என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக இலவச எண். **1800–4252–441** பயன்பாட்டில் உள்ளது..

**28. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை**

**28.1** அரசு வழக்காடும் துறை, சென்னை உயர்நீதிமன்றத்தில் **1997**ஆம் ஆண்டு மாநில அரசு தலைமை வழக்கறிஞரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டது. மாநில அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் I முதல் V, சென்னை உயர்நீதிமன்றத்தின் அரசு குற்றவியல் வழக்கு

நடத்துனர், அரசு வழக்கறிஞர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர் மற்றும் அரசு சிறப்பு வழக்கறிஞர் ஆகியோரின் கீழ் இயங்கும் பகுதி அலுவலகங்கள் மாநில தலைமை வழக்கறிஞரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. இரண்டு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்தில் மாநில அரசின் சார்பாக வழக்குகளை வாதாட நியமிக்கப்பட்டுள்ளனர்.

**28.2** அரசு வழக்காடும் துறையில் மேற்கண்ட **10** பிரிவு அலுவலகங்களில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை நடத்திட **148** சட்ட அலுவலர்களும், **274** அமைச்சுப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

**சட்ட அலுவலர்களுக்கான கட்டடம்**

**28.3** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் **48,000** சதுர அடி பரப்பளவில் சட்ட அலுவலர்களுக்காக தரைத்தளம் + நான்கு அடுக்குகளைக் கொண்ட கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

## 29. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

**29.1** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் முக்கிய குறிக்கோள் மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர்

நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட குற்ற வழக்குகளை முழு கட்டுப்பாட்டுடன் திறம்பட நடத்துவதும், மேற்காணும் நீதிமன்றங்களின் அரசு குற்ற வழக்கு நடத்துனர்கள் பணிகளை கண்காணிப்பதும் ஆகும்.

**குற்ற வழக்குத் தொடர்வுத் துறை அமைப்பு**

**29.2** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் குற்ற வழக்குத் தொடர்வுத்துறை இயக்குநரின் நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இயங்கி வருகிறது. குற்ற வழக்குத் தொடர்வுத் துறைஇயக்குநருக்கு அவரின் நிர்வாகப் பொறுப்புகளில் உதவி புரிந்திட ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்) உள்ளார். அரசு வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்படும் "தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துனர் மாதாந்திர இதழ்" பதிப்பிற்கான வேலையை கவனிப்பதற்காக தனியே உதவி இயக்குநர் தரத்திலான ஒரு இணை இதழாசிரியரையும் உள்ளடக்கி **15** குற்ற வழக்கு தொடர்வு துறை உதவி இயக்குநர்களும் உள்ளனர். இவர்களைத்தவிர **11** துணை இயக்குநர்களும், **30** அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்களும் , நிலை**–1** தரத்திலான **94** அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்களும், நிலை**–2** தரத்திலான **192** அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்களும் இத்துறையில் உள்ளனர். அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள்/ அரசு உதவி குற்ற வழக்கு

நடத்துனர்கள் நிலை–1 / அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்கள் நிலை–2 ஆகியோர் முறையே தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகளை நடத்துகின்றனர்.

**29.3** இதை தவிர, **5** துணை இயக்குநர்கள், **36** கூடுதல் அரசு வழக்கு நடத்துனர்கள், **25** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** மற்றும் **13** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**2** ஆகியோர் அயற்பணியில் காவல்துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம், விவசாயத்துறை, மருந்துக்கட்டுப்பாடு, விதைச்சான்று இயக்குநரகம் ஆகியவற்றில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

**நேரடி நியமனம்**

**29.4** தமிழ்நாடு குற்ற வழக்கு தொடர்வுத் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் **2011–12** ஆண்டிற்காக நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட **84** நிலை–**2** தரத்திலான அரசு உதவி வழக்கு நடத்துனர்களுக்கு, **2015** ஆம் ஆண்டில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**பதவி உயர்வு**

**29.5** குற்ற வழக்கு தொடர்வுத்துறையில் கீழ்கண்ட வழக்கு நடத்துனர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

- **2012** ஆம் ஆண்டில் **29** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** லிருந்து அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்/ குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
- **2013** ஆம் ஆண்டில், **52** அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை–**2** லிருந்து அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–**1** ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
- **2013** ஆம் ஆண்டில், **29** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** லிருந்து அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள்/ உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
- **2013** ஆம் ஆண்டில் குற்ற வழக்குத் தொடர்வுத்துறை இயக்குநர், இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் **13** துணை இயக்குநர் பணியிடங்களுக்கு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.
- **2014** ஆம் ஆண்டில் இணை இயக்குநர் (நிர்வாகம்) பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

- **2014** ஆம் ஆண்டில் குற்றவழக்கு தொடர்வுத் துறை இயக்குநர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

- **2015** ஆம் ஆண்டில் **16** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** லிருந்து அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்/ குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

- **2016** ஆம் ஆண்டில், அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் **68** அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்கள் நிலை–**2** சேர்க்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழ்**

**29.6** மூன்றாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி, தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர்களின் மாத இதழ் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இதில், உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**பயிற்சி**

**29.7** மாநிலத்திலுள்ள அனைத்து அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிப்பதற்கு ரூ.**78.87** இலட்சம் வழங்கி அரசால் ஆணையிடப்பட்டு, இப்பணியிடைப் பயிற்சி அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் **645** குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அணியின் பயிற்சிகால அளவு **10** வேலை நாட்கள் ஆகும். **30** நபர்கள் அடங்கிய **21** குழுவிற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**கைப்பேசி சட்ட மென்பொருள்**

**29.8 71** சட்டங்களை உள்ளடக்கிய கைப்பேசியில் பயன்படுத்தும் மென்பொருள் அனைத்து குற்றவழக்கு நடத்துனர்களுக்கு வழங்குவதற்கு ரூ.**4,83,750/–** ஒப்பளிக்கப்பட்டு குற்ற வழக்குத் தொடர்வுத் துறையை சார்ந்த **195** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள்/ அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்களுக்கும், **232** கால முறையில் நியமிக்கப்பட்டுள்ள குற்ற வழக்கு நடத்துனர்களுக்கும் இவ்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**குற்ற வழக்கு நடத்துனர்களுக்கான சட்டப் புத்தகங்கள்**

**29.9** குற்ற வழக்குத்தொடர்வு இயக்ககத்தின் சட்ட அலுவலர்களுக்கு அவர்களின் சட்டத்திறமை மற்றும் அறிவுத்திறனை பெருக்கிக் கொள்வதற்காக சட்டப்புத்தகங்கள் வாங்குவதற்கு **2011–12, 2012–13** மற்றும் **2014–15** ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.**8,95,670/–**, ரூ.**84,25,300/–** மற்றும் ரூ.**82,00,044/–** ஒப்பளிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது..

**குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், கணினி பயிற்சி வழங்குதல்**

**29.10** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தைச் சார்ந்த **390** குற்றவியல் வழக்கு நடத்துனர்களுக்கு மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், கணினி பயிற்சி அளித்தல், சட்டப்புத்தகங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை இணையம் மூலம் பெறும் வசதி ஆகியவற்றிற்காக ரூ.**5,10,78,097/–** ஒப்பளிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**30. மாநில வழக்காடும் கொள்கை 2012**

மாநிலத்திற்கென தனி வழக்காடும் கொள்கை உருவாக்கப்பட்டது. மாநிலத்தில் அதிக அளவில் நிலுவையிலுள்ள வழக்குகளில் தரமான வெளிப்படையான

முறையில் இவ்வழக்குகளை அணுகி நிருவகித்து நடத்துவதற்கான அரசின் தீர்மானத்தை இந்த கொள்கை பிரதிபலிக்கிறது.

**31. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள்**

பணிபுரியும் வழக்காடும் மக்களின் தேவை அறிந்து நாட்டிலேயே முதன் முறையாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் தொடங்குவதற்கு முன்பு இருந்த நிலுவையை விட 25% கூடுதலான வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. குடும்ப வழக்குகளை விரைந்து முடிப்பதே குடும்ப நல நீதிமன்றங்களின் உயரிய குறிக்கோளாகும். சமரச முயற்சிகளும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுகளே இங்கு வலியுறுத்தப்படுகிறது. குடும்ப நல நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியத்தை அவ்வப்போது அரசு வழங்குகிறது.

**32. முடிவுரை**

பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித்துறை நாட்டின் மக்களாட்சி கூட்டமைப்பு முறையில் ஒரு மைல்கல் ஆகும். நீதித்துறை சுதந்திரமான, தன்னாட்சி பெற்றதாக அமையவும், பொதுமக்கள் குறைகளை நீதிமன்றங்கள் விரைந்து தீர்ப்பதற்கும் உரிய சூழலை உருவாக்கும் விதத்தில் நீதிமன்றங்களுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் அரசு செய்துதரும். அனைவருக்கும் நீதி என்ற உயர்ந்த குறிக்கோளை அடைய அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

**பிற்சேர்க்கை – 1**

*(பத்தி 2 – ஐக் காண்க)*

**தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு**

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

| ***உரிமையியல் நீதிமன்றங்கள்*** | |
|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| சென்னை நகரத்திற்குள் எழும் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிக்கின்றது | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |

| ***குற்றவியல் நீதிமன்றங்கள்*** | |
|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

## பிற்சேர்க்கை – 2

*(பத்தி 4 – ஐக் காண்க)*

**சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்**

| வ. எ ண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு -தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 14 | 6 | -- | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 1 | 23* | 6 |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 18. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| 19. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் – சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 20. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | -- | --- | -- | -- |
| | **மொத்தம்** | **37** | **6** | **1** | **54** | **16** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 114**

**( மாவட்ட நீதிபதிகள் –43, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் –38, உரிமையியல் நீதிபதிகள்–33)**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 4 விரைவு நீதிமன்றங்கள், 2 நடமாடும் நீதிமன்றங்கள் மற்றும் 2 நிலஅபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட**

## பிற்சேர்க்கை – 3

*(பத்தி 4 – ஐக் காண்க)*

## மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| | | | மாவட்ட நீதிபதி | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | மக்கள் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் / விற்பனை வரிமேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள்/கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** | **13** | **14** | **15** | **16** | **17** | **18** | **19** | **20** | **21** | **22** | **23** | **24** | **25** |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | -- | 2 | -- | 2 | -- | -- | -- | 3 | 2 | -- | -- | -- | -- |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 1 | 1 | 2## | 2 | 1 | - | - | 1 | 5 | 1 | -- | 1 | 1 | 2 | 5 | 10 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | -- | -- | 1 | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 8 | 1 | 1 | - | 1 | -- | 9 | 9 | 1# | 1 | - | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | - | 1 | 2 | 1 | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | 1 | - | 2 |
| 5. | திண்டுக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | - | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 5 | 6 | 1 | - | 1 | 3 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 1 | -- | -- | -- | 1 | 8 | 7 | 2 | 1 | 1 | 2 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 5 | - | -- | -- | 1 | -- | 7 | 7 | 2# | - | 1 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 6 | - | -- | - | -- | -- | 9 | 6 | 2 | - | - | 2 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | 1 | - | - |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | -- | -- | -- | -- | 1 | 3 | 1 | 1 | - | 4 |
| 11. | மதுரை | 5 | 1 | 1** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 1 | 6 | 1 | -- | 1 | 1 | 2 | 5 | 10 | 3# | 1 | 1 | 3 |
| 12. | நாகப்பட்டினம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 4 | 5 | 2 | - | - | 1 |

**பிற்சேர்க்கை –3 ன் தொடர்ச்சி**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 3 | - | -- | -- | -- | -- | 5 | 4 | 1 | 1 | 1 | 1 |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | - | -- | 1 | - | -- | -- | -- | -- | 3 | 3 | 1 | 1 | - | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | 1 | 1 | - | -- | -- | -- | -- | 1 | 2 | 1# | 1 | - | - |
| 16. | புதுக்கோட்டை | 2 | -- | -- | -- | 1 | -- | -- | 1 | - | - | 1 | 1 | - | -- | -- | -- | -- | 2 | 3 | - | - | - | 2 |
| 17. | இராமநாதபுரம் | 3 | -- | -- | -- | -- | -- | 1### | 1 | - | - | 1 | 2 | - | -- | -- | -- | -- | 3 | 4 | - | 1 | - | 3 |
| 18. | சேலம் | 4 | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 6 | 2 | -- | 1 | 1 | 1 | 6 | 12 | 3# | 1 | 1 | 1 |
| 19. | சிவகங்கை | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | - | - | 1 | 2 | - | -- | 1 | - | -- | 4 | 3 | 1 | - | - | 4 |
| 20. | தஞ்சாவூர் | 4 | 1 | -- | -- | 1 | -- | 1### | 1 | 1 | - | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | 5 | 6 | 2 | 1 | - | 3 |
| 21. | தேனி | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 3 | 3 | 2 | 1 | - | 2 |
| 22. | தூத்துக்குடி | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | - | 1 | 2 | - | -- | -- | 1 | 1 | 6 | 7 | 2 | 1 | - | 1 |
| 23. | திருச்சி | 3 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | -- | 1 | 1 | 1 | 8 | 9 | 1# | 1 | 1 | 1 |
| 24. | திருநெல்வேலி | 4 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 7 | 1 | -- | 1 | 1 | 1 | 12 | 9 | 1# | 1 | 1 | 4 |
| 25. | திருப்பூர் | 4 | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | 3 | - | - | - | - | 1 | 6 | 8 | 1 | 1 | - | - |
| 26. | திருவள்ளூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | -- | 1 | -- | 8 | 9 | 3 | 1 | - | 1 |
| 27. | திருவண்ணாமலை | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 4 | 1 | -- | -- | -- | -- | 8 | 5 | 1 | - | - | 2 |
| 28. | திருவாரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | 2 | - | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | - | - | 3 |
| 29. | வேலூர் | 4 | -- | -- | 2 | -- | -- | 1 | 1 | - | 1 | 1 | 6 | ***1 | 2 | -- | 1 | 1 | 11 | 14 | 1 | - | - | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 2 | -- | 1 | -- | -- | 16 | 9 | 1 | 1 | 1 | 2 |
| 31. | விருதுநகர் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | - | 1 | 4 | - | -- | -- | -- | -- | 4 | 7 | 1 | 1 | - | 2 |
| | **மொத்தம்** | **85** | **6** | **2** | **8** | **7** | **4** | **18** | **31** | **9** | **15** | **29** | **125** | **17** | **6** | **7** | **12** | **11** | **176** | **194** | **43** | **21** | **10** | **64** |
| | | **மாவட்ட நீதிபதி –185** | | | | | | | | | | **முதுநிலை உரிமையியல் நீதிபதி– 207** | | | | | | | **உரிமையியல் நீதிபதி –508** | | | | | |
| | | | **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 900** | | | | | | | | | | | | | | | | | | | | | |

*** போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் இரண்டு தனி நீதிமன்றங்கள் உட்பட**

**# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)**

**** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்**

**## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட**

***** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் # # # மாவட்ட நீதிபதி தரத்தில் விரைவு நீதிமன்றங்கள்**

பிற்சேர்க்கை – 4

*(பத்தி 10(ப) –வைக் காண்க.)*

**நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 1 |
| 7. | கரூர் | கரூர் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |
| 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 17. | தேனி | தேனி | 1 |
| 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| | | **மொத்தம்** | **25** |

## பிற்சேர்க்கை –5

*(பத்தி 11 – ஐக் காண்க)*

### சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2011 | 319151 | 128799 | 124709 | **323241** | 34223 | 51626 | 44015 | **41834** | 365075 |
| 2. | 2012 | 323241 | 131320 | 123939 | **330622** | 41834 | 51228 | 48646 | **44416** | 375038 |
| 3. | 2013 | 330622 | 130851 | 94317 | **367156** | 44416 | 54795 | 56313 | **42898** | 410054 |
| 4. | 2014 | *148451 | 56701 | 42580 | **162572** | **18624 | 39572 | 38454 | **19742** | 182314 |
| 5. | 2015 | 162572 | 65344 | 52252 | **175664** | 19742 | 36291 | 35751 | **20282** | 195946 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 218705 பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி 24274 பல்வகை குற்றவியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**குறிப்பு:** 10.11.2014 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

## பிற்சேர்க்கை – 6

*(பத்தி 11 – ஐக் காண்க)*

**சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை**

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2011 | 82226 | 56602 | 46233 | **92595** | 12568 | 29308 | 25810 | **16066** | 108661 |
| 2. | 2012 | 92595 | 58905 | 45053 | **106447** | 16066 | 31385 | 28562 | **18889** | 125336 |
| 3. | 2013 | 106447 | 66197 | 49417 | **123227** | 18889 | 37079 | 31770 | **24198** | 147425 |
| 4. | 2014 | *59850 | 30527 | 24035 | **66342** | **13351 | 26447 | 24885 | **14913** | 81255 |
| 5. | 2015 | 66342 | 32545 | 24418 | **74469** | 14913 | 27833 | 28733 | **14013** | 88482 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி **63377** பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி **10847** பல்வகை குற்றவியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**குறிப்பு: 10.11.2014** நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

## பிற்சேர்க்கை –7

*(பத்தி 11 – ஐக் காண்க)*

### மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2011 | 750246 | 929156 | 963700 | **715702** | 491124 | 669013 | 692590 | **467547** | 1183249 |
| 2. | 2012 | 715702 | 921450 | 858516 | **778636** | 467547 | 627654 | 641368 | **453833** | 1232469 |
| 3. | 2013 | 778636 | 969355 | 904787 | **843204** | 453833 | 930547 | 939269 | **445111** | 1288315 |
| 4. | 2014 | *560382 | 345882 | 291512 | **614752** | 445111 | 1332774 | 1353817 | **424068** | 1038820 |
| 5. | 2015 | 614752 | 335867 | 298922 | **651697** | 424068 | 859455 | 852427 | **431096** | 1082793 |

*சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி **282822** பல்வகை உரிமையியல் வழக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை

**குறிப்பு: 10.11.2014** நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் படி அசல் வழக்குகள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

*******